








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## DECEMBER

*We Are Here..!! To Guide You..!!*









# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## டிசம்பர் - 26.12.2018

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- நியமனங்கள்
- முக்கிய தினங்கள்











## இந்திய நிகழ்வுகள்

- நாட்டிலேயே மிகவும் நீளமான **இரண்டடுக்கு பாலமான “போகிபீல்”** பாலத்தை பிரதமர் **டிசம்பர் 25ல்** திறந்து வைத்துள்ளார். இதன் **நீளம் 4.94 கி.மீ.** ஆகும்.
  - இப்பாலமானது, அசாமின் திருப்கரில் இருந்து அருணாச்சலப் பிரதேசத்தின் இட்டா நகருக்கு எளிதாக பயணம் செய்யும் வகையில் பிரமபுத்திரா நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது.

- **புதிய இந்தியாவின்** கட்டமைப்பில் **வளமான கிழக்கு மாநிலங்கள்,** என்பதை நோக்கமாகக் கொண்டு, **“பர்ப்போதயா”** என்னும் திட்டத்தை மத்திய அரசு தொடங்கியுள்ளது.
  - இத்திட்டத்தின் கீழ், புவனேஸ்வரில் (ஒடிஷா) IIT தொடங்கப்படவுள்ளது.

- **பீகாரில்** உள்ள நாளந்தா மாவட்டத்தின் பாரம்பரிய இனிப்பு சுவையுடைய **சிலாயோ காஜாவுக்கு**, **சென்னையில் உள்ள புவிசார் குறியீடு பதிவேடு மூலம் புவிசார் குறியீடு** அளிக்கப்பட்டுள்ளது.

## உலக நிகழ்வுகள்

- **புருண்டியின்** அரசு **“கிடிகாவை (Gitega)”** நாட்டின் புதிய அரசியல் **தலைநகராக** அறிவித்துள்ளது. அந்நாட்டின் முந்தைய தலைநகரான **“புஜிம்புரா”** நாட்டின் **பொருளாதார தலைநகரமாக செயல்படும்** என அறிவிக்கப்பட்டுள்ளது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- **நாசாவின் இன்சைட் விண்கலமானது**, தனது முதலாவது கருவியான **நிலநடுக்க மானியை (SEIS – Seismometer) செவ்வாய் கிரகத்தில் பொருத்தியுள்ளது.**
  - இது செவ்வாய் கிரகத்தில் ஏற்படும் நிலநடுக்கம் மற்றும் நிலநடுக்க அதிர்வுகளை கண்காணிக்கும். இதுவே செவ்வாய் கிரகத்தின் மேற்பரப்பில் பொருத்தப்பட்ட உலகின் முதல் கருவியாகும்.

- **ஸ்பேஸ் எக்ஸ்** என்ற விண்வெளி மையத்தின் முதல்

அதிகாரப்பூர்வமான **விண்கலமான “GPS III”** என்னும் விண்கலம், **பால்கன் - 9** என்னும் **இராக்கெட் மூலம் வெற்றிகரமாக விண்ணில்** செலுத்தப்பட்டது.

- இதில், உலகளாவிய நிலைப்படுத்தல் அமைப்பு முதன் முதலாக(First Global Positioning System – GPS) பொருத்தப்பட்டுள்ளது.

## நியமனங்கள்

- **அமெரிக்காவின்** புதிய **பாதுகாப்பு செயலாளராக, “பாட்ரிக் ஷானான்”** (PATRICK SHANAHAN) என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
  - இவர் “ஜிம் மாட்டிஸ்” என்பவருக்கு பதிலாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## முக்கிய தினங்கள்

- **தேசிய விவசாயிகள் தினம் (கிஷான் திவாஸ்) – டிசம்பர் 23**
  - விவசாயிகளுக்கான பல்வேறு திட்டங்களை செயல்படுத்திய முன்னாள் பிரதமர் “சரண் சிங்” என்பவரின் பிறந்த நாளான “டிசம்பர் 23”ஐ நினைவு கூறும் வகையில், டிசம்பர் 23 தேசிய விவசாயிகள் தினமாக கொண்டாடப்படுகிறது.
  - தேசிய பெண் விவசாயிகள் தினம் அக்டோபர் 15 அன்று கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கது.

We Shine Academy ™